பதிவு எண்: ம: 6511 ★ தொலைபேசி: 51881 நிறுவியது: 1958 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

# நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்பி

மலர்: 16] சென்னை: ஆடி 25 (9—8—68) வெள்ளி ★ வெளியூர்: ஆடி 26 (10—8—68) சனி [இதழ்: 48

## 'திட்டமிட்ட தாக்குதலா?' --- அதிகாரிகள் ஐயம்

# நீதி விசாரணைக்கு உத்தரவு

## தமிழக அரசு உடனடி நடவடிக்கை

### உடையார்பாளையத்தில் அமைதி நிலவுகிறது

சென்னை, ஆக. 8---

உடையார்பாளையத்தில், 'போலீசார் மீது நடைபெற்ற தாக்குதல் பற்றியும், அதையொட்டி நடைபெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் மூன்று பேர் உயிர் இழக்க நேர்ந்தது' குறித்தும் உயர் நீதிமன்ற நீதிபதி ஒருவர் விசாரணை செய்வதற்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

உடையார்பாளையத்தில் நிலைமை அமைதியாக இருப்பதாகக் கூறப்படுகிறது. உடையார்பாளையத்திலும், செயங்கொண்டம், ஆண்டிமடம், தா. பழூர், விக்கிரமங்கலம், செந்துரை ஆகிய கிராமங்களிலும் 15 நாட்களுக்கு 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருக்கிறது.

புதனன்று ஏற்பட்ட இங்கிகழ்ச்சி தொடர்பாக 40 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

உடையார்பாளையத்தில் ஆயுதம் தாங்கிய போலீசுப் படை நிறுத்தப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அண்ணா அவர்களின் உத்தரவுக்கு இணங்க, சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்துவந்த இன்ஸ்பெக்டர்-ஜெனரல், துப்பாக்கிப் பிரயோகம் நடைபெற்ற இடத்தைப் பார்வையிட்டார்; சம்பவம் பற்றி அதிகாரிகள் பலருடனும் தீவிரமாக விசாரணை செய்துவருகிருர்.

நடைபெற்ற இந்தத் தாக்குதல் திட்டமிட்டே செய்யப்பட்டிருக்க வேண்டுமென்று அதிகாரிகள் ஐயப்படுகின்றனர்.

### அண்ணா விளக்கம்

செய்தியாளர் கூட்டத்தில், உடையார்பாளையம் நிகழ்ச்சி குறித்து முதலமைச்சர் அண்ணா அவர்கள் விளக்கிக் கூறியதாவது:—

"புதிதாக அமைக்கப்பட்டிருந்த செயங்கோண்டம் தாலுகாவின் பெயரை, மக்கள் விருப்பத்திற்கிணங்க, 'உடையார்பாளையம் வட்டம்' என்றே மீண்டும் வைத்துக்கோள்வது என்றும் அரசு தீர்மானித்திருக்கிறது.

"நிகழ்ச்சிபற்றி முழுத் தகவலும் அறியும் பொருட்டு, போலீசு இன்ஸ்பெக்டர்-ஜெனரலை உடனடியாக அப்பகுதிக்குச் செல்லுமாறு கூறியிருக்கிறேன். எந்தப் போலீசு அதிகாரியாவது முறை தவறிச் செயல்பட்டிருப்பதாகத் தெரியவருமானல் அவரை உடனே தற்காலிகமாக வேலைநீக்கம் செய்து நடவடிக்கை எடுத்துக்கொள்ளுமாறும் அவரிடம் தெரிவித்திருக்கிறேன்.

"மாணவர் ஒருவர் உட்பட மூவர் இறந்துவிட்டனர் என்ற செய்தி என்னைத் திடுக்கிட வைத்தது.

இங்நிகழ்ச்சியில் மாணவர்கள் கலந்துகொண்டிருப்பினும், மாணவர் பிரச்சினைக்கும் இதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை.

பெயரை மாற்ற வேண்டும் என்ற கோரிக்கைக்காக அப்பகுதி மக்கள், பெருவாரியாக இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர். இதனால் நிலைமை அபாயகரமாக மாறிவிட்டிருக்கிறது.

மாணவர் ஒருவர் இறந்துவிட்டிருக்கிருர் என்ற செய்தி அறிந்ததும் மனவேதனையால் பதறிப்போனேன்.

உயிரிழந்த அத்தனைப் பேருடைய குடும்பத்துக்கும் எனது வருத்தத்தையும் அனுதாபத்தையும் தெரிவித்தக்கொள்கிறேன்.

அப்பகுதி மக்கள் ஆத்திரப்படாமல் அமைதியாக இருக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

## 'நம் நாடு' சிறப்பிதழ்

10---8---68

10-8-68 சனிக்கிழமையன்று வெளிவரும் 'நம் நாடு' இதழில் வட்டக் கழகங்களின் தேர்தல் முடிவுகளும், மற்றும் மாவட்டக் கழகத் தேர்தல்கள் நடைபெறும் இடம்—நேரம்—ஆணையாளர்விவரங்களும் கொண்டு 8 பக்கங்களாக வெளிவரும்.

விலை 15 காசு

—நிர்வாகி, 'நம் நாடு'

## கொடைக்கானல் வட்ட தி. மு. க. தேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்ததற்கேற்ப, 3-8-68 அன்று நடைபெற்ற மதுரை மாவட்டம் கொடைக்கானல் வட்டத்திற்கான தேர்தலில் விடுபட்டுப்போன அவைத் தலைவர் ஒருவர், மாவட்டப் பிரதிநிதிகள் இருவர் ஆகியோருக்கான தேர்தல்கள் 11-8-68 பிற்பகல் 2.மணிக்கு தலைமைக் கழக ஆணையாளர் புலவர் நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## வேடசந்தூர் வட்ட தி.மு.க. மறு தேர்தல்

மதுரை மாவட்டம் வேடசந்தூர் வட்ட தி. மு. கழகத்தின் எல்லாப் பொறுப்புகளுக்குமான மறு தேர்தல், 12-8-68 காலை 10-மணிக்கு தலைமை கழகச் சார்பான ஆணையாளர் மு. வரதராசன் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## தோவாளை தி. மு. க. மறு தேர்தல்

குமரி மாவட்டம் தோவாளை வட்ட தி. மு. க. மறு தேர்தலில், தலைவர், செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் 10 பேர், செயற்குழு உறுப்பினர்கள் 11-பேர் ஆகியோரைத் தேர்ந்தெடுக்க 12-8-68 காலை 10-மணிக்கு பூதபாண்டி பயணியர் விடுதியில் தோழர் கே. கோவிந்தசாமி எம்.சி. தலைமையில் தேர்தல் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

## பண்ணைக்காடு தி.மு.க. தேர்தல்

பண்ணைக்காடு தி. மு. க. தேர்தல், 11-8-68 காலை 11 மணிக்கு பண்ணைக்காட்டில் ஆணையாளர் புலவர் நடேசன் தலைமையில் நடைபெறும்; மாவட்டச் செயலாளர் எஸ். முத்து எம்.எல்.சி. முன்னின்று நடத்தி வைப்பார்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## திண்டுக்கல் வட்ட தி. மு. கழகம்

திண்டுக்கல் வட்ட தி. மு. க, எல்லாப் பொறுப்புக்கான மறு தேர்தல், 12—8—68 காலை 10 மணிக்கு திண்டுக்கல் பயணியர் விடுதியில் தலைமைக் கழக ஆணையாளர் புலவர் நடேசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## நெல்லை வட்ட தி.மு.க. செயலாளர் தேர்தல்

நெல்லை மாவட்டம் நெல்லை வட்ட தி. மு. க. செயலாளர் பொறுப்புக்கு மட்டும் மறு தேர்தல் 12-8-68 திங்கட்கிழமை மாலை 5-மணிக்கு நெல்லை நகர் குறுக்குத் தெரு திருமண மண்டபத்தில் ஆணையாளர் திரு. கே. கோவிந்தசாமி எம்.சி. அவர்கள் தலைமையில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

## சங்ககிரி வட்ட தி.மு.க. தேர்தல்

ஏற்கனவே அறிவிக்கப்பட்டதற்கேற்ப சேலம் மாவட்டம் சங்ககிரி வட்ட தி. மு. கழகத்தின் அவைத் தலைவர், செயலாளர் தவிர்த்து மற்ற தேர்தல் ஆணையாளர் திரு. தமிழ்மணி எம் சி. அவர்கள் தலைமையில் 11-8-68 காலை 10-மணிக்கு சங்ககிரி பயணிகள் விடுதியில் நடைபெறும்.

—தலைமைக் கழகம் (தி .மு. க.)

# மாவட்டக் கழகத் தேர்தல்

14---8---68 காலை 10-மணிக்கு

ஏற்கனவே விடுத்திருந்த அறிவிப்பினையொட்டி மாவட்டக் கழகத் தேர்தல்கள் முறைப்படி நடைபெறும்; மாவட்டம், இடம், ஆணையாளர் ஆகிய விவரங்கள் வருமாறு:---

| மாவட்டம் | இடம் | ஆணையாளர்கள் |
|---|---|---|
| திருச்சி | தமிழ்ச் சங்கக் கட்டிடம், மேலப்புலிவார் ரோடு, திருச்சி | மைனர் மோசஸ் பி.ஏ.பி.எல்., எம்.சி. (முன்னுள் மேயர்) |
| தஞ்சை | இராமநாதன் செட்டியார் மண்டபம் | நா. கணபதி பி.எஸ்சி.பி.எல். |
| மதுரை | திருமண மண்டபம், ஆழ்வார்புரம், மதுரை | வி. எஸ். கோவிந்தராசன் எம்.எல்.ஏ. |
| செங்கற்பட்டு | பயணியர் விடுதி, காஞ்சிபுரம் | வேலூர் நாராயணன் எம்.ஏ.பி.எல். |
| சேலம் | பயணியர் விடுதி, சேலம் | ஏ. வி. பி. ஆசைத்தம்பி எம்.எல்.ஏ. |
| தருமபுரி | பயணியர் விடுதி, அதமன்கோட்டை | கே. எம். கண்ணபிரான் |
| முகவை | பயணியர் விடுதி, மானமதுரை | அ. பொ. அரசு எம்.எல்.ஏ., (முன்னுள் மேயர்) |
| நெல்லை | குறுக்குத்துறை, திருமண மண்டபம் | இரா. சம்பந்தம் எம்.சி., (முன்னுள் மேயர்) |
| குமரி | பயணியர் விடுதி, நாகர்கோவில் | கே. கோவிந்தசாமி எம்.சி. |

[மற்ற மாவட்டங்களின் விவரம் நாளை வெளிவரும்]

—தலைமைக் கழகம் (தி.மு.க.)

# கேட்பது அனுமதி அல்ல--உரிமை!

## இந்தி மொழி பேசுபவர்களுக்குத் தரப்படும் உரிமை மற்ற மொழியினருக்கும் தருவது அவசியம்

### அரசியல் சட்டத்தில் அது இடம் பெறவேண்டும்

**மக்களவையில் இரா. செழியன் வற்புறுத்தல்**

நாடாளுமன்றத்தில், 'இந்தி அல்லது ஆங்கிலம் மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்' என்றுள்ள அரசியல் சட்ட விதியை மாற்றி, 'தமிழ் முதலிய எல்லாத் தேசிய மொழிகளுக்கும் நாடாளுமன்றத்தில் ஒத்த உரிமை தரவேண்டும்' என்று தி. மு. கழக உறுப்பினர் தோழர் இரா. செழியன் அவர்கள், நாடாளுமன்றத்தில் ஒரு தனி நபர் மசோதாவைக் கொண்டுவந்து ஆற்றிய கருத்துரை யாவது :—

"அரசியல் சட்டத்தின் 20-வது பிரிவைத் திருத்தக் கோரும் எனது தனி நபர் மசோதாவை மிக மகிழ்ச்சியுடன் இம்மாமன்றத்தின் கவனத்துக்கு வைக்கிறேன்.

**இம்மசோதாவின் நோக்கம் மேன்மையானது---தூய்மையானது---அனைவராலும் ஒப்புக் கொள்ளப்படுவதாகும்.**

சென்ற நாடாளுமன்றத் தொடரிலேயே—அதாவது 1962—67 காலத்திலேயே—இதைப் போன்ற தனிநபர் மசோதாவை நான் கொடுத்திருந்தேன்; மற்றும் சில கட்சியினரும் தந்திருந்தனர். அப்பொழுதெல்லாம் சீட்டுக் குலுக்கலில் அதற்கு இடம் கிடைக்கப் பெருததால், இந்த அவையின் விவாதத்திற்கு வராமற்போய்விட்டது.

1967-ல் புதிய நாடாளுமன்றக் கூட்டம் துவங்கியதும், முதல் நாளன்றே நான் இந்த மசோதாவை இம்மாமன்றத்தின் முன் வைத்தேன். இந்தத் தடவைதான், குலுக்குச் சீட்டில் எனது மசோதாவிற்கு முதலிடம் கிடைத்து விவாதத்திற்கு வந்துள்ளது.

அரசியல் சட்டத்தின் 120-வது பிரிவு, 'நாடாளுமன்றத்தின் நடவடிக்கைகள் எந்த மொழியில் இருக்கவேண்டும்' என்பதை வரையறுப்பதாகும்; 120-வது பிரிவு கூறுவதாவது :—

"17-வது பகுதியில் வகுக்கப்பட்டதைத் தவிர, நாடாளுமன்ற நடவடிக்கைகள் இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் நடைபெற வேண்டும்.

"மன்றத்தில் உறுப்பினர் ஒருவருக்கு இந்தியில் அல்லது ஆங்கிலத்தில் தெளிவான பேச்சு ஆற்றல் இல்லை என்ருல், அவருடைய தாய் மொழியில் பேச அந்த உறுப்பினருக்கு மாநில அவைத் தலைவரோ, மக்கள் சபைத் தலைவரோ அனுமதிக்கலாம்."

இது, அரசியல் சட்டத்தில் உள்ள விதிமுறையாகும்.

மொழிப் பிரச்சினையின் முழு அளவையும் விவாதிக்க முன்வராமல், இந்தக் குறிப்பிட்ட அளவுக்கு மட்டும்—நாடாளுமன்றத்தில் எந்த மொழிகளைப் பயன்படுத்தலாம் என்ற அளவுக்கு மட்டும்—நான் எனது பேச்சைத் துவங்கியுள்ளேன்.

அரசியல் சட்ட 120-வது பிரிவுக்கு நான் தந்துள்ள திருத்தம் பின்வருமாறு :—

"அரசியல் சட்டத்தின் எட்டாவது பட்டியலில் தரப்பட்டுள்ள எந்த ஒரு மொழியிலாவது அல்லது ஆங்கிலத்திலாவது, நாடாளுமன்ற நடவடிக்கைகள் நடைபெறலாம்."

இப்பொழுதுள்ள அரசியல் சட்ட 120-வது பிரிவின்படி, இந்தியைத் தாய்மொழியாக உடையவர்கள், இந்தியில் தெளிவாகப் பேசக்கூடிய ஆற்றலைப் பெற்றிருப்பவர்கள்; எனவே அவர்கள், நாடாளுமன்றத்தில் தமது கருத்துகளை இந்தியில் வைக்கலாம்.

அதேபோல், ஆங்கிலத்தைக் கொண்டவர்களும் ஆங்கிலத்தில் பேசிவிடுவார்கள். இப்பொழுதுள்ள சட்டப்படி, இந்த இருசாராருக்கும் எந்தவிதச் சங்கடமும் கிடையாது.

ஆனல், இந்தி—ஆங்கிலம் இரண்டும் பேசாத மக்களுடைய நிலைமை என்ன ?

இந்தி, ஆங்கிலம் இரண்டும் தெரியாமல் ஓர் உறுப்பினர் இங்கு வந்தால், அவர் பேசாமல் இருக்க வேண்டியதுதான? அந்த உறுப்பினரும் சனநாயக முறையில்தான் தேர்ந்தெடுக்கப்படுகிருர். பத்து இலட்சம் மக்களுக்குப் பிரதிநிதியாகத் தான் அவர் இங்கு வருகிருர். அவருக்கு இந்தியோ ஆங்கிலமோ தெரியவில்லை என்ருல், பேசாமல் உட்கார்ந்திருக்க வேண்டியதுதான் !

அரசியல் சட்டப்படி, இந்தி—ஆங்கிலம் இரண்டும்தான், அனுமதிக்கப்பட்ட நாடாளுமன்ற மொழிகளாகும்.

இந்தி—ஆங்கிலம் தெரியாதவர்கள் வந்தால், முதலில் தங்களுக்கு இந்தி—ஆங்கிலம் ஆகியவற்றில் தெளிவாகப் பேசும் ஆற்றல் இல்லை என்பதை அவைத் தலைவர் உணரும்படி செய்யவேண்டும்......

துணைத் தலைவர் :— "இப்பொழுதுள்ள பழக்கப்படி தாய்மொழியில் பேச உறுப்பினர்களுக்கு அனுமதி தருகிருேம்."

இரா. செழியன் :— "அனுமதி தரப்படுகிறது என்பதை நான் ஒத்துக்கொள்கிறேன்; நான் கேட்பது அனுமதி அல்ல—உரிமை! இந்தியைத் தாய் மொழியாகக் கொண்டவருக்கு எந்த உரிமை இருக்கிறதோ, அந்த உரிமை தமிழைத் தாய் மொழியாகக்கொண்ட எனக்கும் வேண்டும் என்று கேட்கிறேன். இந்தி பேசுபவர்களுக்குத் தரப்படும் உரிமை, இந்தியல்லாத மற்ற மொழியினருக்கும் தரப்படவேண்டும் என்று கேட்கிறேன். அந்த உரிமை அரசியல் சட்டத்திலேயே வழங்கப்படவேண்டும் என்று கேட்கிறேன்.

அவையின் தலைவராக இருப்பவரின் விருப்பு—வெறுப்பைப் பொறுத்தல்ல; அரசியல் சட்ட உரிமையாக அது அமைய வேண்டும்.

அவைத் தலைவர் தாராள மனம் படைத்தவராக இருந்தாலும்—இந்த அவையின் நடைமுறை விதிகள் எங்களுக்குச் சாதகமாக எழுதப்பட்டாலும்—கடைசியில் நீதிமன்றத்தில் ஒரு வழக்கு சென்ருல், அரசியல் சட்டத்தில் கூறப்பட்ட முறை நிலைபெறுமே தவிர, மற்ற ஏற்பாடுகள் தள்ளப்பட்டு விடும். அதனுல்தான், அரசியல் திருத்தச் சட்ட மசோதாவை நான் கொண்டுவந்துள்ளேன்.

மாநிலச் சட்டமன்றத்திற்குச் சென்ருல், அந்தந்த மாநில மொழி சட்டமன்ற மொழியாக விளங்குகிறது.

தமிழகச் சட்டமன்றத்திற்குச் சென்ருல், அங்கு நுணுக்கம் மிக்க பிரச்சினைகள்கூடத் தமிழில் மிக எளிதாக விவாதிக்கப் படுவதைக் காணலாம்.

உறுப்பினர்கள் பேசப்படுவது அப்படியே ஏற்கப்பட்டு, ஏட்டில் இடம்பெறுகிறது.

அங்கு திறம்பட பணியாற்றுகிற ஓர் உறுப்பினர் நாடாளுமன்றத்திற்கு வந்தால், அவருடைய திறமை ஏற்றுக்கொள்ளப்படவில்லை; அவருடைய கருத்தை மற்றவர்கள் தெரிந்துகொள்வதற்கான வாய்ப்பு தரப்படவில்லை.

ஒருவர் இங்கு பேசுகிருர் என்ருல், எதற்காகப் பேசுகிருர்—தம்முடைய கருத்தை மற்றவர்களுக்குத் தெரிவிப்பதற்காக! அந்த நோக்கம் நிறைவேறினுல்தான், அவருடைய பேச்சுக்குப் பலன் இருக்கிறது என்று கூறலாம். இல்லையானுல், அவர் பேசுவது அவர் காதுகளில் விழுமே தவிர, மற்றவர்களுக்குப் பலன் தராது !

வந்துள்ள உறுப்பினர்கள் தத்தம் தாய்மொழியில் பேச உரிமை வழங்குவதை யாரும் மறுக்க மாட்டார்கள் என்று நினைக்கிறேன்.

'அரசியல் சட்டத்தில் எட்டாவது அட்டவணையில் தரப்பட்ட 15 மொழிகளுக்கும் இடம் தருவது சாத்தியமா' என்று சிலர் கேட்கக்கூடும்.

கொள்கை—நடைமுறை என்று பிரித்து, கொள்கையளவில் இதை ஏற்றுக்கொள்ளலாம்; 'நடைமுறையில் இது சரிப்பட்டு வருமா என்று பார்க்கவேண்டும்' என்று சிலர் கேட்கக் கூடும்.

அனைத்துலக மாநாடுகளில் ஒன்றுக்கு மேற்பட்ட மொழிகள் வழங்க வசதிகள் தரப்படுகின்றன.

ஐக்கிய நாடுகள் அவைக் கூட்டங்களில் ஐந்து மொழிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சோவியத் இரஷ்யாவில், 16 அரசுகள் உள்ளடங்கியுள்ளன; அவற்றின் பிரதிநிதிகள் கூடும் சோவியத் உயர் அமைப்பில், தத்தம் தாய்மொழியில் பேச உரிமை இருக்கிறது.

சோவியத் 'அரசியல் சட்டத்தில் எந்த ஒரு மொழியும் கட்டாயப் படுத்தப்படவில்லை; 'முதல்தர மொழி' என்றே, 'இரண்டாந்தர மொழி' என்றே பாகுபாடு கிடையாது.

'பல மொழிகள் பேசப்பட்டால் ஒன்றுக்கொன்று மொழி பெயர்ப்பு செய்வது சாத்தியமா' என்று அஞ்சத் தேவையில்லை. தானியங்கி ('கம்ப்யூட்டர்') முறையில், மொழி பெயர்ப்புகளை அளிக்கக்கூடிய வாய்ப்பு இருக்கிறது. பம்பாயில் உள்ள 'டாடா அடிப்படை ஆராய்ச்சி' நிலையத்தில், இந்த ஆராய்ச்சி நடைபெறுகிறது.

முதலில் கொள்கையளவில் நான் கூறுவது ஏற்றுக்கொள்ளப்பட்டால், பிறகு விவரங்கள் ஆராயப்படலாம்.

இந்திப் பிரியர் திரு. சேத் கோவிந்த தாஸ் இங்கு இல்லை. 1927-ல் ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில், மத்திய சட்டமன்றத்தின் உறுப்பினராக இருந்த சேத் கோவிந்த தாஸ் அவர்கள், 'ஆங்கிலம், இந்தி, உருது ஆகிய மூன்று மொழிகளும் சட்டமன்ற மொழிகளாக வேண்டும்' என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்தார். அந்தத் தீர்மானத்தின்படி பார்த்தால், இந்த மசோதாவும் ஏற்றுக் கொள்ளப்படவேண்டிய ஒன்ருகும்.

இந்தியாவில் பல தேசிய மொழிகள் -- பல வட்டார மொழிகள் இருக்கின்றன; அவை அனைத்தையும் ஒரே மதிப்புடன் -- ஒத்த வாய்ப்புடன் நாம் வழங்க வேண்டும்.

இந்திய அரசியலில் உயர் அவையாக விளங்குகிற இந்த அவையில், அந்த மொழிகளுக்கெல்லாம் தக்க வாய்ப்பும், மதிப்பும் தரப்படவேண்டும். அதற்கு வழி வகுப்பதுதான் இந்த மசோதா.

மாமன்றத்தின் ஆதரவையும், அமைச்சரின் ஒத்துழைப்பையும் எதிர்பார்த்து, எனது மசோதாவை உங்கள் முன் வைக்கிறேன்."

---

# 1,20,00,000 குழந்தைகள் பிறக்காமல் தடுக்கப்பட்டன

## 48,00,000 பேர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை

### 1968 மார்ச் திங்கள் இறுதிவரையில் ரூ. 67 கோடி செலவு

புதுடில்லி, ஆக 8—

"அடுத்த சில ஆண்டுகளில் பிறந்திருக்கக்கூடிய 120,00,000 குழந்தைகள், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின்மூலம் பிறக்காமல் தடுக்கப்பட்டுவிட்டது"

என்று, நாடாளுமன்ற மேலவையில், குடும்பக் கட்டுப்பாட்டுத் திட்டத்தின் பலன் பற்றிக் கூறுகையில், சுகாதாரத் துணையமைச்சர் டாக்டர் சந்திரசேகர் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது :—

"இதுவரையில் 45 இலட்சம் பேர்களுக்குக் கருத்தடை அறுவைச் சிகிச்சை (மலடாக்கப்படுவது) செய்யப்பட்டிருக்கிறது.

"1968 மார்ச் திங்கள்வரையில் இத்திட்டத்துக்காக ரூ. 67 கோடி செலவிடப்பட்டிருக்கிறது.

"1968 பிப்ரவரித் திங்கள் இறுதி வரையில், கருத்தடைச் சாதனங்களை இறக்குமதி செய்வதற்காக ரூ. 192 இலட்சம் செலவிடப்பட்டிருக்கிறது.

---

# 'முரட்டுத்தனமாக மக்களை வெளியேற்றக்கூடாது'

## 'மனிதாபிமானத்துடன் செயல்பட வேண்டும்'

**மக்களவையில் செ. கந்தப்பன் கோரிக்கை**

புதுடில்லி, ஆக. 8—

"வேலை தேடி ஏராளமான மக்கள் டெல்லிக்கு வருகிருர்கள்; தமிழ்நாட்டிலிருந்தும், மற்றும் பல்வேறு பகுதிகளிலிருந்தும் வருகிருர்கள்; இவர்களை அன்புடன் நடத்தவேண்டும்; இவர்கள் நடைபாதைகளிலும், மற்றும் அரசாங்க இடங்களிலும் தங்கி இருக்கிருர்கள்; இவர்களை முரட்டுத்தனமாக வெளியேற்றக்கூடாது.

"இந்தப் பிரச்சினையை அரசு அனுதாபத்துடன் அணுகவேண்டும்; ஏனென்ருல், இது மனிதாபிமான பிரச்சினையாகும்; எங்கிருந்தாவது ஏழை மக்கள் வெளியேற்றப்பட்டால், அவர்கள் தங்குவதற்கு மாற்று இடம் தரப்பட வேண்டும்"

இவ்வாறு, மக்களவையில் தாக்கல் செய்யப்பட்ட --- அரசாங்கக் கட்டிடங்களில் அனுமதியின்றித் தங்குபவர்களை வெளியேற்ற வகை செய்யும் சட்டத்தின்மீது பேசுகையில், கழக உறுப்பினர் செ. கந்தப்பன் கேட்டுக்கொணடார்.

---

# மாணவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பது ஏன்?

## நாடாளுமன்ற மேலவையில் சரமாரியான கேள்விகள்

புதுடில்லி, ஆக. 9—

மத்திய அரசின் கல்விக் கொள்கைபற்றி, நாடாளுமன்ற மேலவையில் விவாதம் நடந்தது; எஞ்சினீயரிங் கல்லூரிகளில் சேர்த்துக்கொள்ளப்படும் மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைத்ததற்கு உறுப்பினர்கள் கண்டனம் தெரிவித்தனர்.

உறுப்பினர்கள் கேட்ட கேள்விகளும், கல்வியமைச்சர் திரிகுணசென் அளித்த பதில்களும் வருமாறு :—

அர்ச்சுன் அரோரா :—"கல்வி இலாகா அமைக்கப்பட்டதன் நோக்கம், கல்வியைப் பரப்புவது; ஆனல், எஞ்சினீயரிங் கல்லூரி

(3-ம் பக்கம் பார்க்க)

# கொடியவர்களின் செயலால் பண்பாடு பாதிக்கப்பட்டது

## 'தீ'யிடும் தீயவர்களை மன்னிக்க இயலாது

## எரியாத வீடுகளைக் கட்டித் தர அரசு செயலாற்றி வருகிறது

### எதிர்க் கட்சியினர் கூற்றுகளுக்கு அமைச்சர் மு. கருணாநிதி பதில்

சென்னை, ஆக. 8—

"கடந்த திங்களில் ஏற்பட்ட தீவிபத்தால் நூற்றுக்கணக்கான குடிசைகள் எரிந்தன என்பதும், இந்த ஆண்டைப்போல் சென்ற ஆண்டிலும் இதுபோல நடந்தது என்பதும் சமுதாயம் அறிந்த ஒன்ருகும்.

"இதனுல் எவ்வளவு சொத்துக்கள் பாதிக்கப்பட்டன என்பதைவிட—எவ்வளவு வீடுகள் கொளுத்தப்பட்டன என்பதைவிட---பண்பாடு எந்த அளவு பாதிக்கப்பட்டது என்பதைக் கொஞ்சம் ஆய்வுக் கண்கொண்டு பார்த்தால் தெரியும்!

"எத்தனையோ காரணங்களால், யாரோ கொடியவர்கள் —ஆளும் கட்சியும், நகராட்சியும், அரசு அதிகாரிகளும சங்கடப்பட வேண்டும் என்பதற்காக இதைச் செய்கிருர்கள்; அவர்கள் 'அரசியல் கட்சிகளைச் சேர்ந்தவர்கள்' என்று நான் சொல்லமாட்டேன். தீ வைக்கும் கொடியவர்கள் தண்டிக்கப்பட வேண்டும். நல்லெண்ணம் கொண்டவர்கள் அவர்களை மன்னிக்க மாட்டார்கள்.

"பாதிக்கப்பட்ட ஏழை மக்களுக்குத் தீப்பிடிக்க முடியாத குடிசைகளைக் கட்டித்தர எல்லாவித ஏற்பாடுகளையும் செய்து வருகிறோம்; இதுவரையில் ரூ. 38 இலட்சம் நிதி சேர்ந்திருக்கிறது. ஆனுல், 'வசூலித்த தொகை எங்கே, எங்கே?' என்று காங்கிரசார் கேட்கிருர்கள்; அந்தக் கணக்கு விவரங்கள், அரசு நிதித்துறைச் செயலாளர் மூலம் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

"ஆளும் கட்சியினராக நாங்கள் இருக்கும்போது மட்டுமல்ல---எதிர்க் கட்சியாக இருந்தபோதும், வசூலான தொகைக்கு ஒரு காசு வரையில் கணக்குக் காட்டியிருக்கிறோம்; எங்கள் கணக்கு, எப்பொழுதும் சரியான கணக்காகத்தான் இருக்கும்.

"தீப்பிடிக்காத வீடுகள் கட்டப்பட்டு வருகின்றன; இன்னும் இரு திங்களுக்குள் 2,000 வீடுகள் கட்டி முடிக்கப்படும்.

"சென்ற ஆண்டு நூற்றுக்கணக்கான குடிசைகள் கட்டப்பட்டன; குறைந்த செலவில் நிறைய வீடுகளைக் கட்டித் தரவும், மேலும் அதற்கான நிதி திரட்டவும் அரசு ஏற்பாடு செய்துவருகிறது.

"ஏழைகளுக்கு எரியாத வீடு கட்டப் போவதைப் பார்த்ததும், 'எரியாத வீடு கட்டித் தாருங்கள்' என்று எதிர்க் கட்சி நண்பர்கள் பேசுகின்றனர்; கட்டி முடித்ததும், 'நாங்கள் சொன்ன பிறகுதான் அவர்கள் கட்டினுர்கள்' என்று சொல்வதற்காக---காக்கை உட்கார பனம்பழம் விழுந்த கதைபோல்---அவர்கள் பேசிக்கொண்டிருக்கிருர்கள்; பேசட்டும்---அதைப் பற்றி நாமேதும் கவலை கொள்ளப் போவதில்லை."

இவ்வாறு பொதுப்பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், சென்னை 94-வது வட்டம ஏரிக்கரை சத்தியமூர்த்தி நகரில், தீவிபததால் பாதிக்கப்பட்ட ஏழைக் குடிசைவாழ் மக்களுக்குச் செஞ்சிலுவைச் சங்கத்தின் சார்பில் நடைபெற்ற ஆடை வழங்கும விழாவில் பேசுகையில் சுட்டிக்காட்டித் தெரிவித்தார்.

## வேலை நீக்கம் செய்ததன் விளைவு

### பிரிட்டிஷ் தேசியப் பத்திரிகைகள் வெறிச்சோடி வெளிவந்தன

இலண்டன், ஆக. 6—

வழக்ககாக அழகிய போட்டோக்களுடனும், விளக்கப் படங்களுடனும் வெளிவந்துகொண்டிருந்த பிரிட்டனின் தேசியப் பத்திரிகைகள் பலவும், இன்று கவர்ச்சி ஏதுமின்றி வெளியாயின.

மெதுவாக வேலை செய்யும் போக்கை மேற்கொண்ட 700 ஊழியர்களை அதிபர்கள் வேலைநீக்கம் செய்ததனுலேயே இங்கிலை ஏற்பட்டது.

ஏற்கனவே, தொழிற் தகராறு காரணமாக டெலிவிஷன் நிகழ்ச்சிகளும் நடைபெறவில்லை. இத்துடன், பத்திரிகைகளின் இப்போக்கையும் மக்கள் சந்திக்க வேண்டியதாகிவிட்டது.

கடந்த மூன்று வாரங்களாக ஊழியர்கள் கடைபிடித்து வரும் மெதுவாக வேலை செய்யும் போக்கைக் கைவிடக் கோரி, பத்திரிகை அதிபர்கள் விடுத்த வேண்டுகோள், ஏற்றுக்கொள்ளப்படாததாலேயே ஊழியர்கள் வேலை நீக்கம் செய்யப்பட்டிருக்கிருர்கள்.

சம்பள உயர்வுக் 'கோரிக்கை சம்பந்தமாக ஏற்பட்ட இந்தத் தகராறினுல், கார்ட்டூன் துணுக்குகளும், படங்களும் வெளிவர இயலாமல் பத்திரிகைகள் வெறிச்சோடித் தோற்றமளிக்கின்றன.

## விலங்குகளுக்கு இலவச மருத்துவமனை

சென்னை, ஆக 5—

நாய்கள், பூனைகள், கன்றுகள், குரங்குகள் ஆகியவற்றுக்குச் சிகிச்சை அளிக்கும் இலவச மருத்துவமனையை சென்னை அடையாற்றில் விவசாய அமைச்சர் ஏ. கோவிந்தசாமி திறந்துவைத்தார்.

இந்த மருத்துவமனையில் தங்கிச் சிகிச்சை பெறும் 'நோயாளி'களுக்குக் கூண்டுகள் கட்டப்பட்டிருக்கின்றன. அந்தக் கூண்டுகளுக்குள் வசதியான கயிற்றுப் படுக்கைகள் அமைக்கப்பட்டுள்ளன.

பிரிட்டனைச் சேர்ந்த பிரம்மஞான சபை உறுப்பினர் திருமதி டோரா கிராக் போர்டு இந்த மருத்துவமனை அமைக்க நன்கொடை அளித்திருக்கிருர்.

10 கிரவுண்டு நிலத்தில் அமைந்துள்ள இந்த மருத்துவமனையை, நீலச் சிலுவைச் சங்கம் நிர்வகித்து வரும்.

விலங்குகளுக்கு சென்னை நீலச் சிலுவைச் சங்கம் செய்துவரும் பணிகளை அமைச்சர் ஏ. கோவிந்தசாமி பாராட்டினுர்.

விலங்குகள் நல இலாகா டைரக்டர் டாக்டர் மந்திரமூர்த்தியும் விழாவில் கலந்துகொண்டார்.

## மலேரியா நோயிலிருந்து மக்களுக்குப் பாதுகாப்பு

### மாநிலங்கள் செயல்படுத்துவதைப் பொறுத்தே எதிர்காலம் அமைந்திருக்கிறது

மலேரியா நோய் இந்தியாவில் தொன்மைக் காலந்தொட்டே இருந்துவந்திருக்கிறது. ஆண்டுதோறும் ஏறக்குறைய 10 கோடிப் பேருக்கு மலேரியா நோய் ஏற்பட்டதாகவும், குறைந்தது பத்து இலட்சம் பேர் மரணமடைந்தனரென்றும் 1935---36-ம் ஆண்டில மதிப்பிடப்பட்டது.

1952-ல் மேற்கொள்ளப்பட்ட மதிப்பீட்டின்படி, இந்த நோயினுல் ஆண்டுதோறும் 7.5 கோடி பேர் பாதிக்கப்பட்டனர்; சுமார் ஏழரை இலட்சம் பேர் மரணமடைந்தார்கள்.

ஆண்டொன்றுக்கு ரூ. 750 கோடி வீதம் நட்டமேற்பட்டதாக 1952 மதிப்பீட்டிலிருந்து தெரியவருகிறது.

தற்போது நாட்டின் மக்கள் தொகையான 52 கோடி பேரில், மலேரியாவினுல் பாதிக்கப்படக்கூடிய 50.2 கோடிப் பேருக்குப் பாதுகாப்பு அளிக்கப்படுகிறது.

1967-ல் மலேரியாவினுல் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 99.6 சதவிகித குறைந்துவிட்டிருந்தது. அந்த ஆண்டில் மொத்தம் 2,70,000 பேர்தான் மலேரியா நோயினுல் பாதிக்கப்பட்டிருந்தனர். 1952—53-ம் ஆண்டிலோ 7.5 கோடிப் பேர் அல்லலுற்றனர்.

எனவே, பொருளாதார நட்டத்திலும் அதேபோன்று குறைவு ஏற்பட்டிருக்கும் என்று நம்பிக்கையுடன் கூறலாம்; அதாவது, 1967-ல், ரூ. 747.2 கோடி நட்டத்தில் குறைந்திருக்கும் என்று கூறலாம். 1952—53-ம் ஆண்டில் ரூ 750 கோடி செலவு ஏற்பட்டது.

இந்தியாவின் மலேரியா நோய் ஒழிப்புத் திட்டம், உலகிலேயே மிகப் பெரிய பொது சுகாதார நடவடிக்கையாகும். பதினேழு மாநிலங்களிலும், 10 மத்திய நேரடி ஆட்சிப் பகுதிகளிலும் சுமார் 52 கோடி மக்களுக்குப் பயனுற்றி வருகிறது.

இந்தத் திட்டத்தை நிறைவேற்றும் பொறுப்பு தனித்தனி மாநிலங்களைச் சேர்ந்தது என்ருலும், மொத்தமாகத் திட்டமிடுவதும், பயிற்சி---மதிப்பீட்டு நடவடிக்கைகளை மேற்கொள்வதும், தொழில் நுட்ப ஆலோசனை---பூச்சி மருந்துகள்---மலேரியா ஒழிப்பு---மருந்துகள் ஆகியவற்றை வழங்குவதும மத்திய அரசின் பணிகளாக இருந்துவருகின்றன.

பல்வேறு மாநிலங்களும் இத்திட்டத்தைச் செயல்படுததுவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுததுவதைப் பொறுத்துத்தான் இந்தியாவில் மலேரியாவின எதிர்காலம் அமைந்திருக்கிறது. பெருவாரியாக நோய் ஏறபடாதவாறு கட்டுப்படுத்துவதன் மூலமும், மக்கள் தொகைப் பிரச்சினைகளைச் சமாளிப்பதன் மூலமும் இதைச் சாதித்துவிட முடியும்.

## சென்னை 2-வது வட்ட எம். ஜி. ஆர். நற்பணி மன்றம்

2—8—68-ல், சென்னை 2-வது வட்ட காசித் தோட்டம் (புதிய 1-வது வட்டம) தி. மு. க. செயலாளர் சே. அரசு தலைமையில் எம. ஜி ஆர். நற்பணி மன்ற அமைபுக் கூட்டம் நடைபெற்றது; அதுபோது கீழ்க்கண்டவர்கள் நிர்வாகிகளாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்:—

அவைத் தலைவர்: டி. பொன்னுரோக்கியம்; செடலாளர்: மகாலிங்கம்; துணைச்செயலாளர்: பெல்டின்ராஜ்; பொருளாளர்: ஏ. சந்தனதாஸ்; செயறகுழு உறுப்பினர்கள்: எம். குப்புராஜ், எஸ் அந்தோணிசாமி, ஆர். ஜெபமாலைதாஸ், எம். ராஜ், அந்தோணிசாமி; மன்றக் காப்பாளர்: ஜி. தாஸ்.

## செஞ்சிலுவைச் சங்கத்திற்குப் பாராட்டு

விழாவிற்கு செஞ்சிலுவைச் சங்கத் தலைவி தலைமைதாங்கினுர்.

அமைச்சர் கருணுநிதி அவர்கள் ஏழைகளுக்கு ஆடைகள் வழங்கிப் பேசுகையில் கூறியதாவது:-–

"செஞ்சிலுவைச் சங்கம், சமுதாயத்தில் எவ்வளவு தொடர்புடையது என்பது குறித்தும் நாடு காக்கும் போராட்டத்தில் ஈடுபடும் வீரர்களிலிருந்து தாழ்த்தப்பட்ட மக்கள் வரை---அவர்கள் வாழ்வு செம்மையுற---செஞ்சிலுவைச் சங்கத்தினர் என்னென்ன முயற்சிகள் எடுக்கிருர்கள் என்பதும் குறித்து நாம் அறிவோம்---நாடும் அறியும்.

# சென்னை நகருக்குக் காவிரி நீர்த் திட்டம்

## 'மாநில அரசின் கோரிக்கைக்கு ஒப்புதல் எப்போது கிடைக்கும்?'

### மாநிலங்களவையில் தில்லை வில்லாளன் கேள்வி

### 'மத்திய அரசு பரிசீலனை செய்கிறது' என அமைச்சர் பதில்

சென்னை, ஆக. 8—

"காவிரி நீரை சென்னை நகருக்குக் கொண்டுவரும் திட்டத்துக்கு மத்திய அரசிடம் மாநில அரசு அனுமதி கோரியிருக்கிறதா? திட்டத்துக்கு மத்திய அரசின் ஒப்புதல் எப்போது கிடைக்கும்?"

என்று, நாடாளுமனற மேலவையில், கழக உறுப்பினர் தில்லை வில்லாளன் வினவினுர்; துணைச் சுகாதார அமைச்சர் பி. எஸ். மூர்த்தி பதிலளிக்கையில் குறிப்பிட்டதாவது:—

"சென்னை நகருக்குக் காவிரி நீரைக் கொண்டுவரத் தமிழக அரசு திட்டம் ஒன்று தயாரித்து அனுப்பியிருக்கிறது; திட்டச் செலவு ரூ 21 கோடியாகும்.

(2-ம் பத்தி பார்க்க)

(4-ம் பத்தி தொடர்ச்சி)

"திட்டம் நிறைவேற்றப்பட்டால், சென்னை நகருக்கு நாள்தோறும் 400 இலட்சம் காலன் குடிநீர் கிடைக்கும்.

"இந்தத் திட்டத்தை, மத்திய அரசு பரிசிலனை செய்துவருகிறது. திட்டம் பற்றிய சில புள்ளிவிவரங்களைத் தமிழக் அரசிடமிருந்து எதிர்பார்க்கிறோம்; இந்தத் தகவல்கள் கிடைத்ததும், இறுதி முடிவு எடுக்கப்படும்."

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

யில் மாணவர்கள் சேர்க்கப்படும் எண்ணிக்கையில் 30-சதவிகிதம் குறைத்திருக்கிறீர்கள்; இது கல்விக்குத் தடங்கல் செய்வது ஆகாதா?"

அமைச்சர்:—"30-சதவிகிதம் குறைக்கவில்லை; 25-சதவிகிதம் தான் இருக்கும்."

கே. சந்திரசேகரன்:—"மாணவர்கள் எண்ணிக்கையைக் குறைப்பது, தற்கொலைக் கொள்கை அல்லவா?"

அமைச்சர்:—"கல்லூரியில் உள்ள இடங்களைக் குறைக்கவில்லை; வசதிக்குத் தக்கபடி குறைந்த மாணவர்களைச் சேர்த்துக்கொள்கிறோம்; அவ்வளவு தான்."

அர்ச்சுன் அரோரா:—"எஞ்சினீயரிங் கல்லூரிகளில் மாணவர்கள் எண்ணிக்கை குறைவதால், மற்ற கல்லூரிகளில் அதிக மாணவர்கள் சேர்த்துக்கொள்ளப்படுவார்களா?"

அமைச்சர்:—"விஞ்ஞானக் கல்விக்காக 25-சதவிகித இடங்கள் அதிகரிக்கப்பட்டுள்ளன."

# வட்டக்கழகம் வட்டத்தகுதிபடைத்த பெருநகரக் கழகங்களின் தேர்தல்கள்

## செயலாளர், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம்

ஆகஸ்டு 3, 4-ம் நாட்களில் திருச்சி மாவட்டத்தில் நடைபெற்ற வட்டக் கழக — வட்டத் தகுதி படைத்த பெருநகரக் கழகத் தேர்தல்களில் தேர்ந்தெடுக்கப்பட்ட செயலாளர்கள், மாவட்டப் பிரதிநிதிகள் விவரம் இங்கு தரப்படுகிறது ; தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இவர்கள் அனைவரும் மாவட்டக் கழகத் தேர்தலில் வாக்களிக்கும் உறுப்பினர்களாவார்கள்.

### முசிறி வட்டம்

**செயலாளர் :**

ஆ. துரைராசு,
பாலகிருட்டினம்பட்டி அஞ்சல்,
உப்பிலியபுரம்

**பிரதிநிதிகள் :**

எம். எஸ். வெங்கடாசலம்,
எம்.ஏ.பி.எல்.,
துறையூர், திருச்சி 2.

எஸ். கே. வடிவேலு எம்.எல்.ஏ.,
சீலைபிள்ளையார் புத்தூர்.

மு. கரிவண்டன்,
மேட்டுப்பாளையம், முசிரிவட்டம்.

கே. பி. சண்முகம்,
தாத்தையங்கார்பேட்டை.

தே. பொன்னுசாமி,
குணசீலம்.

செ. கணபதி,
செயங்கொண்டம்,
உடையார்பாளையம் வட்டம்.

க. பெ. இரத்தினம்,
எம். களத்தூர்.

க. ந. தங்கவேலு,
காட்டுப்புத்தூர்.

மு. பெ. நடராசன்,
11, ரவுத்து தெரு, முசிறி.

அ. சித்தி,
துறையூர், திருச்சி.

### குளித்தலை வட்டம்

**செயலாளர் :**

கு. வீ. முத்துசாமி,
வதியம் அஞ்சல்

**பிரதிநிதிகள் :**

மெ. போ. அரங்கசாமி,
பேரூர், இராக்கப்பட்டி அஞ்சல்

பி. இராமு,
பாப்பக்காப்பட்டி அஞ்சல்

மணி குருசாமி,
சித்தலவாய் அஞ்சல்

க. தங்கவேலன்,
கல்லடை அஞ்சல்

தமிழரசன்,
அனஞ்சனூர், நங்கவரம் அஞ்சல்

தியாகராசன்,
நச்சலூர் அஞ்சல்

இரா. நாகநாதன்,
கடம்பர்கோவில்

கே. ஆர். பெருமாள்,
கொம்பாடிப்பட்டி,
கே. புதுப்பட்டி அஞ்சல்

எம். மாணிக்கம்,
மலைப்பட்டி, கீரனூர் அஞ்சல்,
பஞ்சப்பட்டி வழி

தீ. வீ. முத்துக்கிருட்டினன்,
குளித்தலை

### மணப்பாறை வட்டம்

**செயலாளர் :**

சி. நா. வெங்குசாமி,
பன்னங்கொம்பு அஞ்சல்,
மணப்பாறை.

**பிரதிநிதிகள் :**

கா. அன்பழகன்,
சூரியகலா ஸ்டுடியோ,
ஏட்டு சாயபு தெரு,
மணப்பாறை.

அ. ஆண்டியப்பன்,
படக் கடை, திருச்சி ரோடு,
மனப்பாறை.

இரகுமதுல்லா,
வளநாடு அஞ்சல், திருச்சி.

ஏசுதாஸ்,
தெ. திராவிடத் தெரு,
மணப்பாறை.

சி. சங்கரன்,
கொட்டப்பட்டி,
தொப்பம்பட்டி அஞ்சல்,
மணப்பாறை.

கே. சாகுல் அமீது,
துவரங்குறிச்சி அஞ்சல்,
திருச்சி.

பி. செம்பியன்,
தாதக்கவுண்டம்பட்டி அஞ்சல்,
விராலிமலை, திருச்சி.

எம். ஆர். சுப்பையா,
லேவாதேவி, திருச்சி ரோடு,
மணப்பாறை.

டி. ஜி பிரகாசம்,
மலையடிப்பட்டி அஞ்சல்,
மணப்பாறை.

வே. பொன்னுசாமி,
மொண்டிபட்டி,
கே. பெரியபட்டி.

### குளத்தூர் வட்டம்

**செயலாளர் :**

பசுமலை க. தங்கராசு,
பசுமலைப்பட்டி,
அம்மாசத்திரம் அஞ்சல்

**பிரதிநிதிகள் :**

கீரை. ஆ. தமிழ்ச்செல்வன்,
தம்பி இல்லம், கீரனூர்

ஏ. பி. இராசு, செயலாளர்,
தி. மு. க. கிளை, அத்திபள்ளம்

சி. சுப்பையா, தி. மு. க. கிளை,
விராலிமலை

பொன். தங்கவேலு,
செயலாளர், தி. மு. க. கிளை,
களமாவூர், கீரனூர்

துரை. நடராசன்,
ஊராட்சித் தலைவர்,
தொடையூர், காவேரி நகர்

மேலை சி. மதிமாறன்,
கோட்டைத் தெரு, இலுப்பூர்

மு. வே. சாமி, காவேரி நகர்

இரா. இரத்தினம்,
கொடம்பாலூர்

எல். எஸ். மாறன், இலுப்பூர்

பூ. மா. சுப்பையா,
சத்தியமங்கலம், காவேரி நகர்

### திருச்சி நகரம்

**செயலாளர் :**

எஸ். ஏ. ஜி. ராபி,
48-சி, அல்லிமால் தெரு,
திருச்சி-8

**பிரதிநிதிகள் :**

பி. சண்முகம்,
60, வடக்கு ஆண்டார் தெரு,
திருச்சி

டி. ஏ. சோமசுந்தரம்,
74, பெரிய கம்மாளத் தெரு,
திருச்சி

எம். எஸ். மணி எம்.எல்.ஏ.,
உறையூர், திருச்சி

ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ.,
மலைக்கோட்டை, திருச்சி

அ. நடராசன்,
11, வடக்கு குஜிலித் தெரு,
திருச்சி-8

எஸ். எம். எம். அப்பாஸ் எம்.சி.,
11-பி, கண்டித்தெரு,
பீமநகர், திருச்சி

ஜி. அன்புமணி,
2, பூலோகநாதர்கோவில் தெரு,
திருச்சி-8

இரா. சீனிவாசன்,
நாதன் அண்டு கோ.,
மதுரை ரோடு, திருச்சி-8

அ. மலர்மன்னன்,
பஜனை மடத் தெரு,
எடத் தெரு ரோடு,
பாலக்கரை, திருச்சி-1

ஐ. எம். செரீப்,
118, ஜெயில் தெரு, திருச்சி-8

### திருமயம் வட்டம்

**செயலாளர் :**

வெ. முத்துவீரப்பன், அரிமழம்

**பிரதிநிதிகள் :**

மு. இயலரசன்,
அரிமழம், திருமயம் வட்டம்

பெரி. மலைமன்னன்,
அரிமழம், திருமயம் வட்டம்

எம். எம். நடராசன்,
பொன்னமராவதி

ஏ. அழகு, புலிவளம்

அ. சுப்பையா,
ஆத்தூர், குழில்பிறை,
திருமயம் வட்டம்

பி. எம். இளம்வழுதி

பி. என். முகைதீன் பிச்சை

கே. சர்புதீன், திருமயம்

மு. உசிலப்பன், அரிமழம்

முத்து இளங்கோ

### ஆலங்குடி வட்டம்

**செயலாளர் :**

அ. பெரியண்ணன்,
மேலக்கோட்டை,
ஆலங்குடி

**பிரதிநிதிகள் :**

வே. மு. குமார்,
ஆதனக்கோட்டை

எஸ். இரங்கசாமி எம்.சி.,
புதுக்கோட்டை.

இரா. கலியாணசுந்தரம்,
ஆலங்குடி.

வே. மணிமொழி,
வெண்ணவல்குடி,
ஆலங்குடி.

வை. கோ. இராசன்,
குப்பையன்பட்டி,
ஆலங்குடி.

வி. எஸ். மணியம்,
ஆலங்குடி.

க. வீரய்யா,
புதுக்கோட்டை.

ஆர். எம். பழனியப்பன்,

இரா. அருணசலம்,
புதுக்கோட்டை.

எம். எஸ். அப்துல் மஜீத்,
செயலாளர், புதுக்கோட்டை
நகர தி.மு.க.

### உடையார்பாளையம் வட்டம்

**செயலாளர் :**

க. சொ. கணேசன்,
தி. மு. க , செயங்கொண்டம்.

**பிரதிநிதிகள் :**

மு. கலியமூர்த்தி,
கடைத் தெரு,
செயங்கொண்டம்,
உடையார்பாளையம் வட்டம்.

என். ஏ. சந்தானம்,
நெட்டலகுறிச்சி, எரவாங்குடி.

எம். என். குருசாமி,
மீன்சுருட்டி,
செயங்கொண்டம்.

பொ. கலியபெருமாள்,
புவாணிபட்டு,
அணிக்குரிச்சான்.

கே. சௌந்திரராசன் பி.ஏ.,
கவரப்பாளையம்,
செயங்கொண்டம்.

ஆர். வெங்கடேசன்,
வக்ரமாரி, கருப்பூர்.

சி. சிவசாமிநாதன்,
மருதூர், பொன்பரப்பி.

து. சுந்தரராசன்,
ஆண்டிமடம்,
செயங்கொண்டம்.

ஜி. இரங்கநாதன்,
இடங்கண்ணி, பழூர்.

டி. எஸ். எம். பழனிவேல்,
கல்லாத்தூர்.

### பெரம்பலூர் வட்டம்

**செயலாளர் :**

இரா. நாராயணன் எம்.எல்.ஏ.,
வதிட்டாபுரம், திட்டக்குடி

**பிரதிநிதிகள் :**

சை. அல்லா பிச்சை,
செட்டிக்குளம்

இரா. சுந்தரராசன்,
கடைவீதி, பெரம்பலூர்

பி. ஆர். கோவிந்தராசன்,
அயன் பேரையூர்

ஏ. கே. சிவலிங்கம்,
துங்கபுரம், அரியலூர்

த. நா. அப்துல் சமத்,
அண்ணா மிதிவண்டி நிலையம்,
லெப்பைக்காடு

கே. கே. சி. ஆறுமுகம்,
கருப்பட்டங்குரிச்சி,
கீழப் பெரம்பலூர்.

வி. மு. விசயகோபால்,
விசயகோபாலபுரம்,
நாரணமங்கலம், பாடாலூர்

கே. எம். ஆறுமுகம்,
இலுப்பக்குடி

அ. முத்து, கோனேரிபாளையம்

சி. முருகேசன், வேப்பூர்

### அரியலூர் வட்டம்

**செயலாளர் :**

கோ. சிவப்பெருமாள்,
காளியம்மன்கோயில் தெரு,
அரியலூர்

**பிரதிநிதிகள் :**

இரா. அப்பாசாமி,
கீழ்வண்ணம்,
கருப்பிலாக் கட்டளை,
கீழப்பழுவூர்

ந. அருணசலம்,
கீழவண்ணம்

எத்துராசன்,
தி. மு. க., அரியலூர்

மு. கோவிந்தராசன்,
சுண்டக்குடி, அம்பாப்பூர்

மு. தங்கவேலன்,
இலந்தைக்குடம், திருமழப்பாடி

என். நாராயணசாமி,
வடக்குத் தெரு, திருமழப்பாடி

பழனிசாமி,
வாரணவாசி

க. வேலாயுதம்,
தி. மு க., அரியலூர்

ந. வேலாயுதம்,
தி. மு. க., அரியலூர்

எஸ். வி. வேலுசாமி,
தி. மு. க., அரியலூர்

### லால்குடி வட்டம்

**செயலாளர் :**

சி. பரமசிவம்,
இடங்கிமங்கலம்,
லால்குடி

**பிரதிநிதிகள் :**

க. அறிவன்,
நகர்.

கே. எஸ். ரங்கராசன்,
கோமாகுடி.

எஸ். ஆர். முத்துசாமி,
சிறுகளப்பூர்.

மு. சுப்பிரமணியம்,
முப்பதுகுடி,
நகர்.

ஆ. மூர்த்தி,
நீதிமன்ற வீதி,
சிறுதையூர்.

ம. ஆதிமூலம்,
நத்தம்,
ஆலங்குடி மகாசனம்.

மு. தங்கையன்,
சிறுதையூர்.

அ. பரமசிவம்,
புள்ளம்பாடி.

செ. பழமலையரசன்,
கீழ் அரசூர்,
மேல அரசூர்.

எம். கிருட்டினன்,
மண்ணச்சநல்லூர்.

### திருச்சி வட்டம்

**செயலாளர் :**

எம். நடராசன்,
திருவரங்கம்

**பிரதிநிதிகள் :**

கு. காமாட்சி,
நடராசபுரம், வேங்கூர்,
திருச்சி-13

கோ. மதிவாணன்,
சுப்பிரமணியபுரம், திருச்சி

கூ. மு. பெரியசாமி,
கூத்தைபார், திருச்சி-13

பீர் முகம்மது,
சுப்பிரமணியபுரம், திருச்சி

இராமசாமி,
சங்கிலியாண்டாபுரம், திருச்சி

சண்முகம்,
பேட்டைவாய்த்தலை, திருச்சி

அ. அரங்கையன்,
சி. புதுக்கோட்டை

சன்னசி,
சீராதோப்பு, திருச்சி.

எல். கருத்தோவியன்,
மேலக்கற்கண்டார்கோட்டை.

எஸ். எம். வி. சாமி,
திருவரங்கம்.

[கரூர் வட்ட தி. மு. க. தேர்தல் முடிவு பின்னர் அறிவிக்கப்படும்.]

### நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

**10--8--68**

**ஆனந்தபுரம் (திருச்சி)**

27-வது வட்ட எம். ஜி. ஆர். மன்ற 4-வது ஆண்டுவிழா ; மாலை 6-30 மணிக்கு மாமுண்டி சாமி கோவில் தெருவில் ; தலைவர் : பொ. பிச்சை ; பேசுவோர் : தஞ்சை திருமதி கிரேசி சேவியர், ஒய். சேவியர், எம். எஸ். மணி எம்.எல்.ஏ., எஸ். ஏ. ஜி. ராபி, வி. கிருஷ்ணமூர்த்தி, இரா. கோவிந்தராசன், மற்றும் பலர்,

**சத்திரப்பட்டி**

தி. மு. க. சார்பில் இரவு 7-மணிக்கு நடுத் தெருவில் ; தலைவர் : கு. குத்தாலிங்கம் ; பேசுவோர் : கே. ஆர். பி. மணிமொழியன். ஆர். பி. ஆதிநாராயணன், டி. கே. கே. சாமி, ப. கருப்பஞானியார், அ. இராமச்சந்திரன். (முத்தமிழ் இசைக் குழுவினர் கலைநிகழ்ச்சி நடைபெறும்)

**பாலர் அரங்கம்**

ஆகஸ்டு 9, 10, 11 தேதிகளில்
மாலை 4-மணிக்கு
"சீசருக்கு தங்கம்"
(எம்.ஜி.எம். கலர் படம்)

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயணன் செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்படுகிறது.